## தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரி – 2016

---

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 யூன் 01 முதல் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப கல்லூரி சட்டவாக்கத்தின் 17(2) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 கல்லூரியை ஸ்தாபித்தல்

2008 இன் 31 ஆம் இலக்கத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 5(உ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினது (1) ஆம் உப பிரிவின் கீழ் 2016 யூன் 01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் பொருட்டு தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையால் தயாரிக்கப்பட்ட 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகக் கல்லூரிச் சட்டவாக்கத்தின் கீழ் அதன் இணைந்த நிறுவகமாக பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமைகள் 5, 6 மற்றும் 7 ஆம் மட்டத்திலும் அதற்குச் சமமான மட்டத்திலுமான தொழில்நுட்பக் கற்கை நெறிகளைச் செயற்படுத்துவது இதன் பிரதான நோக்கமாக உள்ளது.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கைகளின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்துக்கள் பாவனைக்குத் தயார்செய்யப்பட்ட நிலையிலிருந்த தினம் முதல் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பாடநெறிக்குரியதாக பயன்படுத்தக்கூடியதாக கருதப்படாத ரூபா 84,529,310 கூட்டுத்தொகையான பயிற்சி உபகரணங்களுக்காக கணக்கீட்டுக் காலப்பகுதிக்குரியதாக ரூபா 1,696,441 தொகை பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் கல்லூரிக்கு 2015 ஆம் ஆண்டில் ரூபா 98,693,921 தொகையான நிலையான சொத்துக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், கல்லூரி சமர்ப்பித்திருந்த பட்டோலையின் பிரகாரம் அது ரூபா 94,090,956 ஆனமையால் ரூபா 4,602,965 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், வேறுபாட்டிற்கான காரணம் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் சொத்துக்கள் மற்றும் களஞ்சியப் பொருட்கள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கல்லூரியினால் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 3,904,303 பெறுமதியான கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கல்லூரியின் 2016 யூன் 01 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான நிதி விளைவுகள் ரூபா 2,775,099 மிகையாக இருந்தது. மீளாய்வாண்டில் ஊழியர் கிரயம் ரூபா 5,270,505 ஆக இருந்த போதிலும் அரசாங்கத்தின் மானியம் ரூபா 13,151,154 கிடைப்பனவு மிகைக்கான பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 யூன் 29 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2016 யூன் 01 ஆந் திகதி முதல் பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரி அமுலுக்கு வரவேண்டிய போதிலும், கல்வி நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் ஒக்தோபர் 14 ஆந் திகதியிலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேசிய தொழில் தகைமைகளுடன் பாடநெறிகளை நடாத்துவதற்காக பயிற்சி நிலையங்களைப் பதிவுசெய்தல் மற்றும் தரப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கல்லூரி ஆரம்பித்த 06 பாடநெறிகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 29 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க சுற்றாடல் அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தியின் பிரகாரம் அரசின் காணிகளிலிருந்து அகற்றப்படுகின்ற மரங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கல்லூரியினால் கல்லூரியை நிர்மாணிக்கும் போது அகற்றப்பட்ட மரங்கள் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 41,918 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(ஆ) திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயற்சி அமைச்சினால் 2016 ஆகஸ்ட் 18 மற்றும் ஒக்தோபர் 03 ஆந் திகதிகளில் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்த 02 வாகனங்களை கல்லூரிக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதில் ஒரு வாகனத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) கேகாலை நில அளவையாளர் அலுவலகம் ஊடாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திலிருந்து கல்லூரியை நடாத்திச் செல்வதற்காகப் பெறப்பட்ட 05 ஏக்கர் காணியின் உரித்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கல்லூரியின் பெயருக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

அரசாங்கத்தின் பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாக கல்லூரியினால் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இரண்டு தனியார் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், நிர்வாக சபையின் அங்கீகாரமின்றி இந்த சேவையாளரின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டு மீளாய்வாண்டு காலப்பகுதியில் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 2,307,641 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

திட்டமிடப்பட்ட பாடநெறிகள் குறிக்கப்பட்ட திகதியில் ஆரம்பிக்கப்படாமையின் காரணமாக பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரிக்கு 2015 ஆம் ஆண்டில் திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 84,529,310 பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை 2017 மே 31 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்லூரியைத் தாபிப்பதற்கு முன்னர் கல்விசாரா பதவியணியினர்களுக்காக 2015 ஆம் ஆண்டின் சனவரி 01 ஆந் திகதி மற்றும் யூலை 02 ஆந் திகதிகளில் முறையே 4 உத்தியோகத்தர்கள் மற்றும் 14 உத்தியோகத்தர்களுமாக கல்லூரிக்கு சேர்க்கப்பட்டு அத்திகதி முதல் அமைச்சிற்குரிய ஏனைய நிறுவனங்களில் சேவைக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம், பல்வேறு தரங்களுக்கும் உரிய இந்த பதவியணியினரில் 18 உத்தியோகத்தர்கள் 17 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளம், படிகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினமாக ரூபா 10,282,015 செலவினம் திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்ட நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2014 சனவரி 22 ஆந் திகதிய DMS/1670 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் கல்லூரிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இல்லாத உதவி நிதியாளர் மற்றும் உதவி நூலகர் போன்ற பதவிகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அவ்வாறே உதவி நூலகர் பதவிக்காக சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் கல்லூரியின் பதிற்கடமை உதவிப் பதிவாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டமையின் காரணமாக உதவி நூலகர் பதவியின் கடமைகள் உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்கூறப்பட்ட (ஆ) இல் குறிப்பிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் கல்லூரிக்காக பதவியணியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் விரிவுரையாளர் போன்ற இரண்டு பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், கல்லூரியின் ஏனைய பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்பும் போது தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தது. எனினும், எந்தவொரு ஆட்சேர்ப்பு நடைமுறைகளுமின்றி மீளாய்வாண்டின் போது 02 விரிவுரையாளர்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) பயிலுனர் விரிவுரையாளர்களாகச் சேர்க்கப்பட்ட வெளிநாட்டு பட்டத்தைக் கொண்ட இரண்டு உத்தியோகத்தர்களின் பட்டச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கல்லூரி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2016 ஒக்தோபர் முதல் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த பட்டங்கல பல்கலைக்கழக கல்லூரிக்காக தனியான உள்ளக்க கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு பணிகளின் பொறுப்பு தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உள்ளக்க கணக்காய்வு பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு காலப்பகுதியில் உரிய கல்லூரி தொடர்பாக உள்ளக்க கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கல்லூரியின் எதிர்கால நோக்கங்களை பின்பற்றும் வகையில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வவ்போது கல்லூரியின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| ---------------------------------------------- | | ------------------------------ |
| (அ) | கணக்கீடு, புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணல் | காசேடு முறையாகப் பேணப்படாமை, சில்லறைக்காசு மற்றும் முற்பணத்திற்காக பதிவேடு பேணப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்களின் கணக்கு வைத்தல் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை, வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | பதவியணியினரை ஆட்சேர்த்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளாமை மற்றும் ஆளணிக் கோவைகளைப் பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |